# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## SECOND TERMINAL EXAMINATION (2017-18)

## MIDDLE SECTION

# TAMIL – CLASS –VI

**TIME – 3 HOURS** **MAX.MARKS – 80**

நேரம் - 3 மணி தமிழ் - ஆறாம் வகுப்பு மதிப்பெண்கள் - 80

---

## பிரிவு-அ

அ. கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து, கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடையளிக்க :- 5 x 1= 5

தாஜ்மகால் இந்தியாவிலுள்ள நினைவுச் சின்னங்களுள், உலக அளவில் பலருக்குத் தெரிந்த ஒன்றாகும். இது ஆக்ராவில், யமுனை நதிக்கரையில் கட்டப்பட்டுள்ளது. இது முழுவதும் பளிங்குக் கற்களால் ஆனது. உலகப் புகழ் பெற்றது. இது ஏழு அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இக்கட்டிடம் முகலாய மன்னன் ஷாஜகானால் இறந்துபோன அவனது இளம்மனைவி மும்தாஜ் மகால் நினைவாக 22,000 பணியாட்களைக் கொண்டு 1631 ஆம் ஆண்டு முதல் 1654 ஆம் ஆண்டுக்கு இடையில் கட்டப்பட்டது.

வினாக்கள் :-

1. தாஜ்மகால் இந்நதிக்கரையில் கட்டப்பட்டுள்ளது.

அ. சிந்து ஆ. யமுனை இ. கங்கை ஈ. காவேரி

2. ஷாஜகான் இப்பரம்பரையைச் சேர்ந்தவர்.

அ. சோழர் ஆ. பாண்டியர் இ. முகலாயர் ஈ. மாமல்லர்

3. தாஜ்மகால் முழுவதும் இக்கற்களால் ஆனது.

அ. கருங்கல் ஆ. செங்கல் இ. மார்பிள் ஈ. பளிங்கு

4. தாஜ்மகாலைக் கட்டுவதற்கு பணிக்கப்பட்ட வேலையாட்களின் எண்ணிக்கை ________

அ. 20,000 ஆ. 2,22,000 இ. 22,000 ஈ. 2200

5. தாஜ்மகால் ஒரு ______________ ஆகும்.

அ. மசூதி ஆ. அரண்மனை இ. பள்ளிக்கூடம் ஈ. நினைவுச்சின்னம்

ஆ.பின்வரும் பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க :-

5 x 1= 5

சிட்டுக்குருவி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவையினத்தைச் சேர்ந்த உயிரினமாகும். சிட்டுக்குருவிகள் பசரீன்கள் குடும்பத்தைச் சார்ந்தவை. இந்தியாவில் இவை வீட்டுக்குருவிகள் , அடைக்கலக்குருவிகள் , ஊர்க்குருவிகள் என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன. இவை உருவத்தில் சிறியனவாகவும் சாம்பல் கலந்த பழுப்பு நிறத்திலும் இருக்கும். இவை ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளில் காணப்படுகின்றன. இவற்றை செல்லப்பிராணியாக வளர்க்க முடியாது. சிட்டுக்குருவிகள் மரத்திலும் , வீடுகளின் மறைவான இடங்களிலும் வைக்கோல் போன்ற மெல்லிய பொருட்களைக் கொண்டு கூடுகட்டி வசிக்கின்றன.

வினாக்கள் :-

1.சிட்டுக்குருவிகள் எக்குடும்பத்தைச் சேர்ந்தவை ?

2.எங்கெல்லாம் சிட்டுக்குருவிகள் காணப்படுகின்றன ?

3.சிட்டுக்குருவிகள் என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன ?

4.சிட்டுக்குருவிகளின் வசிப்பிடம் பற்றி எழுதுக.

5.சிட்டுக்குருவிகளை நீ பார்த்திருக்கிறாயா ? எங்கு பார்த்திருக்கிறாய் ?

இ.பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்குக் கடிதம் எழுதுக :- 1 x 7= 7

1.உன் பிறந்தநாள் விழாவிற்கு தோழன் /தோழியை அழைத்துக் கடிதம் எழுதுக.

2.சகோதரியின் திருமணம் காரணமாக பள்ளிக்கு வர இயலாமை குறித்து வகுப்பு ஆசிரியருக்கு இரு தினங்கள் விடுப்பு கேட்டு விண்ணப்பம் எழுதுக.

ஈ.கட்டுரை எழுதுக :- 1 x 6= 6

நீ விரும்பும் பறவை அல்லது விலங்கு

## பிரிவு-ஆ

இலக்கணம் :- 15 x 1=1 5

அ. தகுந்த சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-

1. ஆண்பால்

அ. விமானம் ஆ. ஒட்டகம் இ. பெண்டிர் ஈ. குமரன்

2. வினைச்சொல்

அ. மாதவி ஆ. விமானம்

இ. கேட்டான் ஈ. நனி சிறந்தது

3. நிகழ்காலம்

அ. 1974 ஆ. 2017 இ. 1999 ஈ. 2030

ஆ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக :-

4. கேள்வியால் வருவது ______________

அ. செய்தி வாக்கியம் ஆ. வினா வாக்கியம்

இ. உணர்ச்சி வாக்கியம் ஈ. கட்டளை வாக்கியம்

5. தமிழகத்தில் மழைவெள்ளம் ஆறாக ஓடியது என்பது ____________ காலம்

அ. இறந்த காலம் ஆ. கோடைக்காலம் இ. வருங்காலம் ஈ. நிகழ்காலம்

6. பேசுவோன் அயலானைக் குறித்துக் கூறுவது ______________

அ. தன்மை இடம் ஆ. முன்னிலை இடம் இ. படர்க்கை இடம் ஈ. அஃறிணை

இ. அடைப்புக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-

7. தாத்தா ( பெண்பாலாக்குக )

அ. அம்மா ஆ. அத்தை இ. பாட்டி ஈ. அக்கா

8. தாஜ்மகால் என்னே அழகு! ( எவ்வகை வாக்கியம் என எழுது )

அ. செய்தி வாக்கியம் ஆ. வினா வாக்கியம்

இ. உணர்ச்சி வாக்கியம் ஈ. கட்டளை வாக்கியம்

9. நான் ( முன்னிலை இடமாக்குக )

அ. நாம் ஆ. நமக்கு இ. நீ ஈ. அவர்கள்

<u>ஈ. தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-</u>

10. தமக்கை

அ. அஃறிணை ஆ. பெண்பால் இ. தன்மை இடம் ஈ. வினா வாக்கியம்

11. இயோ! பாம்பு ! பாம்பு !

அ. செய்தி வாக்கியம் ஆ. வினா வாக்கியம்

இ. உணர்ச்சி வாக்கியம் ஈ. கட்டளை வாக்கியம்

12. வருவாள்

அ. தன்மை இடம் ஆ. இறந்தகாலம் இ. நிகழ்காலம் ஈ. வருங்காலம்

<u>உ. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-</u>

13. அ. கருத்து வகை வாக்கியங்கள் இரண்டு வகைப்படும்.

ஆ. கருத்து வகை வாக்கியங்கள் நான்கு வகைப்படும்.

இ. கருத்து வகை வாக்கியங்கள் ஆறு வகைப்படும்.

ஈ. கருத்து வகை வாக்கியங்கள் எட்டு வகைப்படும்.

14. அ. காவலர் திருடனைப் பிடித்தார் என்பது இறந்த காலம்.

ஆ. காவலர் திருடனைப் பிடித்தார் என்பது எதிர்காலம்.

இ. காவலர் திருடனைப் பிடித்தார் என்பது நிகழ்காலம்.

ஈ. காவலர் திருடனைப் பிடித்தார் என்பது குளிர்காலம்.

15. அ. ஐ, ஆல், கு என்பன இடைச்சொற்கள்

ஆ. ஐ, ஆல், கு என்பன உரிச்சொற்கள்

இ.ஐ, ஆல், கு என்பன வினைச்சொற்கள்

ஈ.ஐ, ஆல், கு என்பன எதுவுமில்லை

## பிரிவு-இ

<u>அ.பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-</u> 6 x 1= 6

1.மடல்பெரிது ____________

அ.மகிழ் ஆ.தாழை இ.காந்தள் ஈ.அனிச்சம்

2.சால்புடைய குணம் என்பது ______________

அ.பெருமைக் குணம் ஆ.சிறுமைக் குணம்

இ.நல்ல குணம் ஈ.தீய குணம்

3.காமராசர் ஏறத்தாழ ____________ நாட்கள் சிறையில் இருந்தார்.

அ.300 ஆ.1330 இ.3000 ஈ.1300

4.வட இந்தியச் செய்தித்தாள்கள் காமராசரை இவ்வாறு போற்றின.

அ.பேரறிஞர் ஆ.காலா காந்தி இ.மகாத்மா காந்தி ஈ.கர்ம வீரர்

5.ஜப்பானின் தலைநகர் -

அ.நியூயார்க் ஆ.டோக்கியோ இ.லண்டன் ஈ.மியான்மர்

6.ரோபோவின் மூளை ____________

அ.ரோபோலான் ஆ.ஒளிபுட்டக்கருவி இ.சிலிக்கான் சில்லு ஈ.எதுமில்லை

<u>ஆ.பொருள் கூறுக</u>. 4 x 1= 4

1.அகவை 2.விந்தை 3.இழுக்கு 4.சால்பு

<u>இ.எதிர்ச்சொல் எழுதுக</u>. 4 x 1= 4

1.பெரிது 2.மேதை 3.சிற்றூர் 4.நிறைய

<u>ஈ.பிரித்தெழுதுக</u>. 4 x 1= 4

1.கணினியின்றி 2.தொழிற்சாலை

3.உள்ளத்தனைய 4.மடல்பெரிது

**உ. சேர்த்தெழுதுக.** 3 x 1= 3

1. சிறுமை + ஊறல் 2. நலம் + அறிய 3. பெருமை + தலைவர்

**ஊ. நிரப்புக.** 2 x 1= 2

1. ரோபோ இயங்கப் பயன்படும் மொழிக்கு ________________ என்று பெயர்.

2. காமராசர் பிறந்தநாளைக் ____________ நாளாகக் கொண்டாடுகிறோம்.

## பிரிவு-ஈ

**அ. ஏதேனும் நான்கனுக்கு குறுகிய விடையளி :-** 4 x 2= 8

1. தாழை – மகிழ் ஒப்பிடுக.

2. எது திருவினையாக்கும் ? எது இன்மை புகுத்தி விடும் ?

3. ரோபோவின் கண் , காது , மூக்கு மற்றும் மூளையாக இயங்கும் பகுதிகள் யாவை ?

4. முதலமைச்சர் காமராசரால் கட்டப்பட்ட அணைகளுள் நான்கினைக் குறிப்பிடுக.

5. ரோபோக்கள் செய்யும் வீட்டு வேலைகள் யாவை ?

6. காமராசரின் பெற்றோர் யாவர் ?

**ஆ. ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி :-** 1 x 5= 5

1. காமராசர் எவ்வாறெல்லாம் பாராட்டப்படுகிறார் ?

2. ரோபோ செய்யும் அரிய பணிகள் யாவை ?

3. நமக்கு நன்மை தருவனவாக ஔவையார் கூறுவன யாவை ?

**இ. அடிமாறாமல் எழுதுக.** 4+2 = 6

1. 'நல்லாரை' எனத் தொடங்கும் மூதுரைப் பாடலை எழுதுக.

2. 'வெள்ளத்தனைய' எனத் தொடங்கும் குறளை எழுதுக. **அல்லது**

'இழுக்கு' என முடியும் குறளை எழுதுக.

*************